# கழகத்தின் அடுத்த கட்ட நடவடிக்கையை வடிவமைக்கப் போகிறேன்!

# “உடன்பிறப்பே... நீங்கள் சொல்லுங்கள்!.. நான் கேட்கிறேன்!”


## ‘உடன்பிறப்பின் குரல்’ வெப்சைட்டைத் தொடங்கிவைத்து - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, மே 17-**

**“உடன்பிறப்பே.. நீங்க சொல்லுங்க.. நான் கேட்கிறேன்”.. என ‘உடன்பிறப்பின் குரல்’ வெப்சைட்டைத் தொடங்கி வைத்து காணொலியில் உரையாற்றுகையில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

**தி.மு.க. இன்னும் எப்படியெல்லாம் உழைக்க வேண்டும் என கருத்துகளைக் கேட்கிறார் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள். கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள வீடியோவில், “ஆன்லைன் வாயிலாக கருத்துகளைக் கேட்டு அடுத்த கட்ட நடவடிக்கையை வடிவமைக்கப் போகிறேன், கட்சியின் எல்லா மட்டத்திலும் தேவையான மாற்றங்களைச் செய்யப் போகிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.**

**நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க., 59 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியை இழந்தது. கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்ட கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெற்றி வாய்ப்பை இழந்தார். இந்நிலையில், ‘உடன் பிறப்பின் குரல்’ என்ற பெயரில் கழகத் தொண்டர்களிடம் கருத்துகளைக் கேட்டு ‘வெப்சைட்’ ஒன்றினைத் தொடங்கியுள்ளார், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**






இதுதொடர்பாகப் பேசி காணொலி ஒன்றை ‘எக்ஸ்’ தளத்தில் கழகத் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ளார்.

கழகத் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள அந்தக் காணொலி வருமாறு:-

“எல்லாருக்கும் வணக்கம். ஒரு சின்ன இடைவெளிக்குப் பிறகு உங்களோடு வீடியோவுல பேசுகிறேன். கடைசியாக, ‘டீலிமிடேஷன்’ (Delimitation) பற்றிப் பேசியிருந்தேன். அதைத் தொடர்ந்து தேர்தல் எல்லாம் நடந்து முடிந்திருக்கிறது. முடிவுகளும் வந்து விட்டன.

தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு என்னவெல்லாம் நடந்தது, என்ன நடக்கிறது என எல்லாவற்றையும் பார்த்துக்கிட்டுதான் இருக்கோம். இரண்டு வாரமாக எல்லா வீடுகளிலேயும் நியூஸ் சேனல்தான் ஓடிக்கிட்டே இருக்கிறது. அந்த அளவுக்கு விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாமப் போகிறது.

2026 தேர்தல் முடிவுகளை எடுத்துக் கொண்டு பார்த்தால், தி.மு.க. ஒரு பெரிய பின்னடைவைச் சந்தித்திருக்கிறது. அதை நாம ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். இது நிச்சயமாக நாம எதிர்பார்த்த ‘ரிசல்ட்’ இல்லை. இதற்கு அவர் காரணம், இவர் காரணம் என்று யாரும் யார் மேலயும் பழி போடாதீர்கள். தலைவராக இந்தத் தோல்விக்கு நானே பொறுப்பேற்றுக் கொள்கிறேன். வெற்றி கிடைக்கும் போது எனக்குத்தான் அந்த ‘கிரெடிட்’ வந்து சேருகிறது, அப்போ தோல்வி அடையும்போது அந்தப் பழியை நான்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் ஒரு நல்ல தலைவருக்கான இலக்கணம்.

நாம் தோற்றுவிட்டோம். அதுக்காக அதையே நினைச்சுக்கிட்டு முடங்கிவிட மாட்டேன். உடனே அப்டேட் ஆகி மீண்டு வருவேன். நாம் எல்லாருமே அப்படித்தான் வரவேண்டும். உங்களுடைய ஆலோசனைகள், பரிந்துரைகள், ஐடியாக்கள் எனக்கு வேணும். எலக்சனா இருந்தாலும் கரெக்சனாக இருந்தாலும் உங்ககிட்டதான் வந்தாக வேண்டும். மக்கள்தான் எல்லாம்.

இந்தத் தேர்தல் முடிவுகளுக்கு என்ன காரணம்? தி.மு.க. இன்னும் எப்படியெல்லாம் உங்களுக்காக உழைக்க வேண்டும்என்றுநீங்கள்நினைக்கிறீர்கள் என்று சொல்லுங்கள். உங்களுடைய கருத்துகளை வெளிப்படையாகச் சொல்லுங்கள். அதுக்காகத்தான் இந்த ‘உடன்பிறப்பின் குரல்’ வெப்சைட். இதில் உங்கள் கருத்துகளைப் பதிவிடுவது ரொம்ப சிம்பிள். உங்கள் குரலிலேயே பேசி கருத்துகளைச் சொன்னீர்கள் என்றால் அதுவே டைப் ஆகிடும். நேரடியா நீங்களே டைப் பண்ணியும் சொல்லலாம். இல்லையென்றால், ஒரு பேப்பர்ல எழுதி அந்தப் போட்டோவை அப்லோட் பண்ணலாம், டாக்குமெண்ட்டா அனுப்பலாம்.

உங்கள் கருத்துகள் எனக்கு வந்து சேர்ந்துவிடும். அதையெல்லாம் படித்துப், பரிசீலித்து நாம அடுத்தகட்ட நடவடிக்கையை வடிவமைக்கப் போகிறேன். நம்முடைய அணுகுமுறை, சிந்தனை, செயல்பாடு எல்லாவற்றையும் காலத்துக்கு ஏற்ற மாதிரி ‘எவால்வ்’ (Evolve) ஆகித்தான் ஆக வேண்டும். உங்களுடைய கருத்துகளின் அடிப்படையில ‘DMK 2.0’ வரும். கட்சியின் எல்லா மட்டத்திலேயும் தேவையான மாற்றங்களைச் செய்யப் போகிறேன்”.

இதனால் அடுத்த நூறு ஆண்டுகளுக்கும் இந்த இயக்கம் உயிர்ப்போடு இயங்கும், உங்களுக்காக இயங்கும். உடன்பிறப்பே... நீங்கள் சொல்லுங்கள்!.. நான் கேட்கிறேன்!”

இவ்வாறு அந்த காணொலியில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசியுள்ளார்.

---

# ஆதவ் அர்ஜூனா தனது வார்த்தைகளை கட்டுப்படுத்த வேண்டும்!

## முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் எம்.எல்.ஏ. பதிலடி!

*சென்னை, மே 17-*

*107 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றுவிட்டு 170 இடங்களில் வெற்றி பெற்றதுபோல் தவெகவினர் பேசுவது வேடிக்கையாக உள்ளது என முன்னாள் அமைச்சர் சிவசங்கர் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார். மேலும் அவர் குதிரை பேர அரசியல் செய்யும் த.வெ.க.வினர் தி.மு.க. மீது குற்றஞ்சாட்டி மக்களிடம் அனுதாபம் தேட முயற்சிக்கிறார் என்றும் கூறியுள்ளார்.*



*இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய சா.சி.சிவசங்கர் எம்.எல்.ஏ., த.வெ.கவின் அலட்சியத்தால், அகங்காரத்தால், அதிகார வெறியால் கரூரில் 41 பேர் உயிரிழந்தனர் என்றும், கரூர் சம்பவத்தின் போது வருத்தம் தெரிவிக்காமல் தி.மு.க. மீது குற்றம்சாட்டி மக்களின் கவனத்தை த.வெ.கவினர் திசை திருப்பினர் என்றும் சாடினார். த.வெ.க ஆட்சி அமைக்க கூடாது என தி.மு.க. எப்போதும் நினைக்கவில்லை, என்று தெரிவித்த முன்னாள் அமைச்சர் சிவசங்கர், தி.மு.க. - அ.தி.மு.க. கூட்டணி என்பது வதந்தி என்பதற்கு பலமுறை விளக்கம் தரப்பட்டுள்ளது என்றும் கூறினார்.*

**குதிரை பேரம் நடத்திய த.வெ.க.**

*த.வெ.க. அரசு குதிரை பேரம் நடத்தியதாக சட்டமன்றத்தில் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கு இது வரை பதில் அளிக்கவில்லை என்றும் அவர் கூறினார். தங்களை தூய சக்தி என கூறியவர்கள் அரசியல் அதிகாரத்திற்காக அதிமுகவை உடைக்கும் வேலையை வெளிப்படையாக செய்துள்ளனர் என்றும் முன்னாள் அமைச்சர் சிவசங்கர் குற்றஞ்சாட்டினார். ஆதவ் அர்ஜுனா தன்னுடைய வார்த்தைகளை கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கையில் கூறினார்.*

---

### கொடைக்கானல் பேரிஜம் வனப் பகுதிக்குச் செல்ல

# சுற்றுலாப் பயணிகளுக்கு தடை !

*கொடைக்கானல், மே 17-*

*கொடைக்கானல் பேரிஜம் வனப் பகுதியில் புலிகள் நடமாட்டம் காணப்படுவதால், மதிக்கட்டான் சோலை, பேரிஜம் ஏரி, தொப்பி தூக்கி பாறை உள்ளிட்ட இடங்களுக்கு மறு அறிவிப்பு வரும் வரை சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி இல்லை என வனத் துறை அறிவித்துள்ளது.*

*மலைகளின் இளவரசியான கொடைக்கானலுக்கு தமிழகம் மட்டுமின்றி வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடு களில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். குறிப்பாக ஏப்ரல், மே மாதங்களில் கோடை விடுமுறையை கொண்டாட லட்சக்கணக்கானோர் வருவது வழக்கம். அதன்படி தற்போது கோடை விடுமுறை காரணமாக குடும்பத்துடன் சுற்றுலா பயணிகள் கொடைக்கானலுக்கு படையெடுத்து வருகின்றனர்.*



சூலூர் சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராகப் போட்டியிட்ட கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் சுல்தான்பேட்டை மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட கள்ளப்பாளையம், பாப்பம்பட்டி, அப்பநாயக்கன்பட்டி, செலக்கரிச்சல், சுல்தான்பேட்டை, பூராண்டம்பாளையம், வடவள்ளி, போகம்பட்டி, பெரியகுயிலி, இடையர்பாளையம் பகுதி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். இதில் சுல்தான்பேட்டை ஒன்றிய கழக செயலாளர்கள் ரமேஷ் (மேற்கு), முத்துமாணிக்கம் (கிழக்கு), உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் வேதாரண்யம் சட்டமன்ற தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்ட வேதாரண்யம் நகரக் கழக செயலாளர் மா.மீ. புகழேந்தி கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதி வேதாரண்யம் மேற்கு ஒன்றியத்தில் கழத்திற்கு வாக்கு அளித்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார் உடன் மாநில விவசாய அணி துணைத் தலைவர் எஸ்.கே. வேதரத்தினம், வேதாரண்யம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் உதயம் வே.முருகையன் மற்றும் பலர் உள்ளனர்.

---

### நாகப்பட்டினம் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில்

# ஆறுகள், வடிகால்கள், வாய்க்கால்களை முழுமையாக தூர் வார வேண்டும்!

## மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கை!

*நாகை, மே 17-*

*மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*தமிழ்நாட்டின் உணவுத் தேவையில் பெரும்பகுதியை பூர்த்தி செய்து வரும் காவிரி டெல்டா மாவட்டங்களின் விவசாயம் முழுமையாக காவிரி நீரை சார்ந்துள்ளது. நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர்,, மயிலாடுதுறை, கடலூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களின் விவசாய உற்பத்தி மட்டுமின்றி, சென்னை உள்ளிட்ட 19 மாவட்டங்களின் குடிநீர் தேவையும் காவிரி நீரின் மூலமே பூர்த்தி செய்யப்படுகிறது. தற்போது கூட வீராணம் வழியாக சென்னை குடிநீருக்காக தண்ணீர் அனுப்பப்பட்டு வருகிறது.*



*டெல்டா மாவட்டங்களில் மட்டும் சுமார் 36 ஆயிரம் கிலோமீட்டர் தூரத்திற்கு ஆறுகள், வாய்க்கால்கள் மற்றும் வடிகால்கள் உள்ளன. கடந்த ஆண்டுகளில் பல கோடி ரூபாய் மதிப்பில் தூர் வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.*

**மேட்டூர் அணை தண்ணீர் திறப்பு!**

*மேட்டூர் அணையில் இருந்து ஜூன் மாதம் பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்படும் முன்பாகவே ஏ, பி, சி, டி வாய்க்கால்கள் முழுமையாக தூர் வாரப்பட வேண்டும். தண்ணீர் திறந்த பிறகு கண்துடைப்பாக தூர் வாரும் பணிகளை மேற்கொள்ள கூடாது. மேலும், வாய்க்கால்கள் மற்றும் வடிகால்களை வருவாய்த் துறை பதிவுகளின் அடிப்படையில் சர்வே செய்து பின்னரே பணிகள் தொடங்கப்பட வேண்டும்.*

*தூர் வாரப்படும் மண்ணை வாய்க்கால் கரைகளிலேயே குவிப்பதால், மழைக்காலங்களில் மீண்டும் மண் கரைந்து வாய்க்கால்களை அடைத்து விடுகிறது. இதன் காரணமாக தண்ணீர் வடிகால் பாதிக்கப்பட்டு விளைநிலங்களில் நீர் தேங்கி பயிர்கள் சேதமடைகின்றன. எனவே, தூர் வாரும் பணிகள் அறிவியல் முறையிலும் தரமான முறையிலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.*

*தூர் வாரும் பணிகளை தனியார் ஒப்பந்ததாரர்களிடம் ஒப்படைப்பதை தவிர்த்து, வேளாண் பொறியியல் துறையின் மூலம் நேரடியாக மேற்கொண்டால் மட்டுமே பணிகளில் தரம் உறுதி செய்யப்படும். எந்தெந்த இடங்களில் முன்னுரிமை அடிப்படையில் தூர் வார வேண்டும் என்பதையும் அந்தந்த பகுதி விவசாயிகள் மற்றும் பாசனதாரர்களுடன் கலந்தாலோசித்து தீர்மானிக்க வேண்டும்.*

**விவசாயிகளின் ஒப்புதலின்றி பணிகள்!**

*அண்மையில் தூர் வாரும் பணிகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டாலும், விவசாயிகளின் ஒப்புதல் இன்றி ஒப்பந்ததாரர்களின் விருப்பப்படி பணிகள் நடைபெற்றதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இத்தகைய நடைமுறையை புதிய அரசு மாற்ற வேண்டும்.*

*பிரதான ஆறுகளில் பல ஆண்டுகளாக மணல் திட்டுகள் அகற்றப்படாமல் இருப்பதால் வெள்ள அபாயம் அதிகரித்துள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகளை அடையாளம் கண்டு முன்கூட்டியே நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

*காவிரி மேலாண்மை ஆணையம் கர்நாடகத்திற்கு தண்ணீர் திறக்க உத்தரவிட்டபோதும், உரிய அளவு தண்ணீர் திறக்கப்படாத சூழலில், இந்த ஆண்டுக்கான தூர் வாரும் பணிகளுக்கு உடனடியாக போதிய நிதி ஒதுக்கி நாகப்பட்டினம் உள்ளிட்ட கடைமடை வரை தண்ணீர் செல்வதை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும்.*

*மேலும், டெல்டா விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்து மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அரசு நேரடியாக விவசாய சங்கங்களுடன் ஆலோசனை நடத்தி தீர்வு காண வேண்டும் என வலியுறுத்துகிறேன்.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.*